செ.வெ.எண்: 384 நாள்: 17.06.2020

**விவசாயிகளுக்கு சூரிய சக்தியுடன் கூடிய பம்பு செட்டுகள் 70 சதவீத மானியத்தில் அமைத்து கொடுக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

விவசாயிகளுக்கு சூரிய சக்தியுடன் கூடிய பம்பு செட்டுகள் 70 சதவீத மானியத்தில் அமைத்து கொடுக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

வேளாண்மையில் நீர் பாசனத்திற்கு தேவையான எரிசக்தியினை உறுதி செய்யும் நோக்கத்துடன் 2013-2014 ஆம் ஆண்டு முதல் சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை தமிழக அரசு விவசாயிகளுக்கு மானியத்தில் அமைத்து கொடுத்து வருகிறது. சூரியசக்தி பம்பு செட்டுகள் மூலம் மின் இணைப்பு தேவையின்றி பகலில் சுமார் 8 மணிநேரம் பாசனத்திற்கு தடையில்லா மின்சாரம் பெறமுடியும்.

மத்திய அரசு, பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான எரிசக்தி பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் (PM-KUSUM) கீழ் தமிழகத்திற்கு 17,500 மின்கட்டமைப்பு சாராத தனித்தியங்கும் சூரியசக்தியால் இயங்கும் பம்பு செட்டுளை வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்திட ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் மத்திய அரசின் 30 சதவீத மானியத்துடனும் மற்றும் தமிழக அரசின் 40 சதவீத மானித்துடனும் ஆக மொத்தம் 70 சதவீத மானியத்தில் செயல்படுத்தப்படுகிறது. மீதமுள்ள 30 சதவீதம் விவசாயிகள் பங்களிப்பாகும்

இத்திட்டத்தின் கீழ் 5 முதல் 10 குதிரைத்திறன் வரையிலான AC மற்றும் DC மோட்டார் பம்பு செட்டுகளுக்கான (நீர்மூழ்கி பம்பு செட்டுகள் மற்றும் தரை மட்டத்தில் அமைக்கும் மோனோ பிளாக் பம்பு செட்டுகள்) விலை நிர்ணயம் செய்தல் மற்றும் நிறுவனங்களை அங்கீகரித்தல் ஆகியவை மத்திய அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

5HP AC மற்றும் 5 HP DC சூரிய சக்தியால் நீர்மூழ்கி மோட்டார் பம்பு செட்டு அமைப்பதற்கான மொத்த விலை முறையே ரூ. 2,37,947 மற்றும் ரூ.2,42,303 ஆகும். இதில் விவசாயிகளின் 30 சதவீத பங்களிப்பு முறையே 71,384 மற்றும் 72,691 ஆகும்.

7.5HP AC பற்றும் 7.5HP DC சூரியசக்தியால் இயங்கும் நீர் முழ்கி மோட்டார் பம்பு செட்டு அமைப்பதற்கான மொத்த விலை முறையே ரூ.3,16,899 மற்றும் 3,49,569 ஆகும். இதில் விவசாயிகளின் 30 சதவீத பங்களிப்பு முறையே ரூ. 95,070 மற்றும் ரூ.1,04,871 ஆகும்.

10HP AC பற்றும் 10HP DC சூரியசக்தியால் இயங்கும் நீர்முழ்கி மோட்டார் பம்பு செட்டு அமைப்தற்கான மொத்த விலை முறையே ரூ.4,37,669 மற்றும் 4,39,629 ஆகும். இதில் விவசாயிகளின் 30 சதவீத பங்களிப்பு ரூ.1,31,301 மற்றும் 1,31,889 ஆகும். மொத்த விலை என்பது நிறுவுதல் செலவு, வரிகள், 5 ஆண்டுகால பராமரிப்பு மற்றும் காப்பீடு செலவுகளை உள்ளடக்கியது.

இத்திட்டத்தின் கீழ் சூரியசக்தியால் இயங்கும் 5 முதல் 10 குதிரைத்திறன் வரையுள்ள AC மற்றும் DC நீர் மூழ்கி பம்பு செட்டுகள் மற்றும் தரை மட்டத்தில் அமைக்கும் மோனோ பிளாக் பம்பு செட்டுகள், இதுவரை மின் இணைப்பு பெறப்படாத நீர் பாசனத்திற்கான ஆதாரங்களுக்கு கீழ்க்கண்டவாறு விவசாயிகளுக்கு 70 சதவீத மானியத்தில் மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் இலவச மின் இணைப்பு கோரி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விவசாயிகள் அவர்களுடைய முன்னுரிமையை துறக்க வேண்டிய அவசியமில்லை. தங்களுக்குரிய இலவச மின் இணைப்பு முறை வரும்பொழுது சூரியக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை மின் கட்டமைப்புடன் இணைப்பதற்கான சம்மதக் கடிதத்தினை சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்தில் வழங்க வேண்டும்.

இதுவரை இலவச மின் இணைப்பு கோரி விண்ணப்பிக்காத விவசாயிகள் இத்திட்டதின் கீழ் சூரியசக்தி பம்பு செட்டுகளை அமைத்திட, இலவச மின் இணைப்பு கோரி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை. இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை மின் கட்டமைப்புடன் வரும் காலங்களில் இணைத்திட விரும்பும் விவசாயிகள், இலவச மின் இணைப்பு கோரி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

இத்திட்டத்தின் கீழ் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை அமைத்திட விண்ணப்பம் அளிக்கும் பொழுது சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை நுண்ணீர் பாசனத்துடன் இணைத்திட உறுதிமொழி அளித்திட வேண்டும்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற ஆர்வமுடைய விவசாயிகள் வேளாண்மைப் பொறியியல்துறை, உதவி செயற்பொறியாளர், புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி அலுவலகம் அல்லது வேளாண்மைப் பொறியியல் செயற்பொறியாளர் புதுக்கோட்டை அதுவலகங்களில் தொடர்பு கொண்டு, விண்ணப்பித்து பயன்பெறலாம். மேலும் விபரங்களுக்கு புதுக்கோட்டை வேளாண் அலுவலகம் தொலைபேசி எண் 04322 221816, 95005 88125 மற்றும் அறந்தாங்கி வேளாண் அலுவலகம் 90803 43110 என்ற எண்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**